**மாதளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுகம் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

1.1 மாதளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்புக்களுடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58 (1) ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 மாதளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 23 கணக்காய்வு அறிககைகளில் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளதுடன், முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான காரணமாகியிருந்த பொருன்மையான தவறுகள் கீழ் காண்பிக்கப்படகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்.**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டிய போதும், 09 கமநல சேவை செயற்குழுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,271,832 ஆன ஏக்கர் வரி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது ஏக்கர் வரி வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | 1981 ஒக்தோபர் 16 ஆம் திகதிய இலக்கம் 107 கொண்ட கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் 30 (4) பந்தி பிரகாரம் இயந்திர உபகரணங்கள் கிரயத்தின் மீது பெறுமானத் தேய்வு செய்ய வேண்டிய போதும் பண்டரபொல, கிம்பிஸ்ஸ மற்றும் லக்கலபல்லேகம ஆகிய கமநல சேவை செயற்குழுக்களில் இயந்திர உபகரணங்கள் குறைந்து செல்லும் மீதி முறையின் மீது பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தன. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் பயிற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் பிரகாரம் அனைத்து சொத்துக்களும் குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதென. | சுற்றிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2000 ஜுன் 06 ஆம் திகதிய இலக்கம் 518/2000 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் | திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் கணக்கு அறிக்கையை | சுற்றிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் 2022 ஆண்டின் 23 கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் கமநல சேவை செயற்குழுகளில் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரித்துள்ளதென. | வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 16 திகதிய 7/5/8/312 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 07 கமநல சேவை செயற்குழுக்களினால் நிவாரண பசளை 16761 கிலோ கிராம் கூடுதலான விலைக்கு விற்பனை செய்து கிடைத்திருந்த ரூபா 1,960,054 இனை செயற்குழுவின் வருமானமாக கணக்கீடு செய்யப்படடிருந்தது. | மாவட்ட அலுவலகங்கள் மூலம் வழங்கியிருந்த அறிவுறுத்தல் பிரகாரம் கணக்கு அறிக்கை தயாரித்ததாக மற்றும் எதிர்காலத்தில் அறிவுறுத்தல் கிடைக்கும் விதத்தின் பிரகாரம் கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவை செயற்குழுக்களில் 2020/21 பெரும் போகத்தின் பசளை செலவின மீள்நிரப்பல் கூட்டுத் தொகை ரூபா 391,636 மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கடந்த ஆண்டிற்குரியதாக மீள்நிரப்பப்பட்ட தொகை திரண்ட நிதியத்திற்கு அல்லது பெற வேண்டிய கணக்குகளிற்கு சீராக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் 08 கமநல சேவை செயற்குழுகளில் நிலையான வைப்பு வட்டி ரூபா 372,153 உம், பெற வேண்டிய கமநல வங்கி பங்கிலாபம் ரூபா 484,046 உம், பங்குவிளைவு விவசாய பிரவேணி தொகையிலிருந்து செயற்குழு நிறுத்திக் கொள்ள வேண்டிய ரூபா 16,685 தொகை மற்றும் செலுத்த வேண்டிய பங்குவிளைவு விவசாய பிரவேணி ரூபா 182,115 தொகை கணக்கீடு செய்யப்படடிருக்கவில்லை. | 2023 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்வதென. | ஆண்டிற்குரிய வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதி திகதியளவில் 04 கமநல சேவை செயற்குழுகளில் கணக்காய்வு கட்டணம் ரூபா 77,420 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய மீதியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | எல்கடுவ கமநல சேவை செயற்குழுவினால் நிவாரண பசளை முற்பணத்தை தீர்ப்பதற்கு 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட ரூபா 125,000 ஆன 02 காசோலைகள் மறுக்கப்பட்டிருந்த போதும் அதனை மீண்டும் கடன்கொடுனர் கணக்கிற்கு செம்மையாக்காது தவறுவுடன் மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்படடிருந்தது. | இந்த காசோலை பெறுமதிகள் செலுத்த வேண்டிய மீதிகள் ஆவதுடன் 2023 ஆண்டின் போது கணக்கு அறிக்கை தயாரிக்கும் போது சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் |
| (ஊ) | தென்ன கமநல சேவை செயற்குழுவிற்கு பெற வேண்டிய ரூபா 999,371 ஆன கமநல வங்கி பங்கிலாபமொன்று தவறுடன் செயற்குழுவினால் செலுத்த வேண்டிய பங்கிலாபமாக கணக்கீடு செய்யப்படடிருந்தது. | செலுத்த வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 999,371 இனை 2023 ஆண்டினுள் சரிசெய்வதென. | சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2019 ஆண்டின் கமநல அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து லக்கல பல்லேகம கமநல சேவை செயற்குழுவிற்கு கிடைத்த 13 நிலையான சொத்துக்களிற்குரியதாக 2019 ஆண்டிலிருந்து 2021 ஆண்டு வரை காலத்தினுள் ரூபா 123,757 மற்றும் மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 52,760 பெறுமானத் தேய்வு கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதனை சரி செய்வதென. | சொத்துக்களிற்குரியதான சரியான பெறுமானத் தேய்வு பெறுமதிகளை இனங்கண்டு திரண்ட நிதியத்திற்கு மற்றும் நிதி செயலாற்றல் கூற்றிற்கு செம்மையாக்க வேண்டும். |
| (ஏ) | 2022 திசெம்பர் 31 திகதியளவில் பௌதீக ரீதியாக அழிவடைந்துள்ள ரூபா 581,851 ஆன இருப்புக்கள் ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழுவில் நிதி நிலைமை கூற்றில் இறுதி இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் அகற்ற நடவடிக்கை எடுப்பதென. | அழிவடைந்துள்ள இருப்பை முறையாக கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2020 ஒக்தோபர் 01 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையான காலத்திற்காக மத்தியநிலைய விற்பனை நிலையத்திலிருந்து ஹதுன்மத கமநல சேவை செயற்குழுவிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 317,493 தொகை மற்றும் விற்பனை நிலையத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 389,084 தொகையை தீர்த்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | விறபனை நிலையத்தினால் செயற்குழுவிற்கு செலுத்த வேண்டிய 16 மாத வாடகை வருமானம் ரூபா 80,000 ஆன போதும், செயற்குழுவிற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 317,493 ஆகும். எனினும் செயற்குழுவினால் விற்பனை | கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றை சரியாக இனங்கண்டு வெவ்வேறாக கணக்கு வைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிலையத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 393,084 காணப்படுகிறது.<br><br>அதன் பிரகாரம் அறவிட வேண்டிய தொகையை கழித்த பின்னர் மேலும் ரூபா 75,590 தொகை விற்பனை நிலையத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக காணப்படுவதென. | |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவை செயற் குழுக்களின் 05 வருமான விடயங்களில், 07 சொத்து விடயங்களில், பொறுப்பு விடயமொன்றில் மற்றும் உரிமை விடயம் ஒன்றிற்குரியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள், நேரொத்த அறிக்கையுடன் இணக்கம் செய்கையில் கூட்டுத் தொகை ரூபா 1,991,026 ஆன இணங்கமின்மை நிலவியது. | சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | வாசலகோட்டே கமநல சேவை செயற்குழுவில் தினப் பெறுவனவு பதிவேட்டின் பிரகாரம் மீதியை காசுப் புத்தக மீதியுடன் இணக்கம் செய்கையில் மீளாய்வாண்டில் ஆரம்ப காசு மீதியில் ரூபா 17,654 ஆன இணக்கமின்மையும் இறுதி காசு மீதியில் ரூபா 20,300 ஆன இணக்கமின்மையும் நிலவின. | சரியான முறையில் செம்மையாக்க உரிய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை சரிசெய்ய வேண்டும். |

### 1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாலவெல கமநல சேவை செயற்குழுவில் 2020 மற்றும் 2021 ஆண்டுகள் முதல் நிலவிவரும் கூட்டுத் தொகையான ரூபா 76,235 ஆன செலவு மீதி மற்றும் ரூபா 33,760 ஆன வரவு மீதியொன்று அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கி பதிவழிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே, ஹதுன்மமுவ கமநல சேவை செயற்குழுவில் கடந்த ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்படுகின்ற ரூபா 103,100 ஆன கடன்படுனர் மீதிகள் அங்காரமின்றி நிதியத்திற்கு செம்மையாக்கி மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. | மீண்டும் தேவைப்பாட்டின் பிரகாரம் மீள் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு மீதிகள் திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ரூபா 103,100 ஆன செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்பிக்கப்பட்ட போதும் உள்ளவாறு அவ்வாறான தொகையொன்று செலுத்த வேண்டியதாக அவதானிக்கப்படவில்லை ஆகையால் நிதியத்திற்கு செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | உரிய அங்கீகாரத்துடன் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஒக்தோபர் 27 திகதிய இலக்கம் 16/2021 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்காது மற்றும் அங்கீகாதமின்றி கோன்கஹவெல கமநல சேவை செயற்குழுவினால் 76 விவசாயிகளின் காலாதியான கடன் வட்டி ரூபா 293,500 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | 16/2021 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் 2022 ஆண்டில் வட்டி நிவாரணம் வழங்கப்பட்ட 76 கடன்தாரர்களின் கடன் வட்டி பதிவழிக்கும் பதிவேடு மின் அஞ்ஞல் மூலம் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்துள்ளதென. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் அங்கீகாரத்தை பெற்று பதிவழிக்க வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 கமநல சேவை செயற் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் காணபித்துள்ள கூட்டுத் தொகை ரூபா 556,596 ஆன 08 சொத்து விடங்களில், கூட்டுத்தொகை ரூபா 174,463 ஆன 02 பொறுப்பு விடயங்களில் மற்றும் தேவஹுவ கமநல சேவை செயற்குழுவில் நிதி நிலைமை கூற்றில் உரிமைகளிலிருந்து கழிப்பனவாக காணபித்துள்ள ரூபா 1,819,801 ஆன மீதிகளிற்கான அட்டவணைகள், சேமிப்பு கணக்கு புத்தகங்கள், மீதி | முன்னரிலிருந்து கணக்கு அறிக்கைகளில் முன்கொண்டு வரப்படும் மீதியாகையால் விபரங்களை கண்டறிய முடியாதுள்ளதென, சேமிப்புக் கணக்குகளிற்காக, பாஸ் புத்தகங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென மற்றும் எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்ள குறித்துக் கொண்டதென. | கணக்கு மீதிகள் தொடர்பான அனைத்து உறுதிப்பாடுகளையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

உறுதிப்பாட்டு ஆவணங்கள் மற்றும் கடிதக் கோவைகள் சமர்ப்பிக்கபடாத காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன ான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) | 53 (4) (அ) பிரிவு | 16 செயற்குழுக்களில் 300 பிரிவுகளில் வயற்காணி பெயர் பட்டியலை கமநல அபிவிருத்தி ஆணையாளர் பரீட்சித்து உறுதிப்படுத்தி இருக்காததுடன் 05 கமநல சேவை செயற்குழுகளில் 80 விவசாய காணி பெயர் பட்டியல்களின் குறைபாடுகளை தயாரித்து உறுதிப்படுத்துவதற்காக அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆவணங்களில் குறைபாடுகளை சரிசெய்து கொண்டு போவதுடன் அக் குறைபாடுகளை சரி செய்து கையொப்பம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 55 (1) பிரிவு | 08 கமநல சேவை செயற்குழுகளில் குழு அதிகார எல்லையினுள் உள்ள விவசாய காணிகளை அளவையிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உலகலாவிய நிலைப்படுத்தல் தொகுதியை (GPS) தொழில்நுட்பத்தின் ஊடாக மென்பொருள் ஒன்றின் மூலம் அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நி. பி. 315 | 04 செயற்குழுக்களினால் மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் 63 சந்தர்ப்பங்களில் ரூபா 12,960 முதல் ரூபா 5,159,700 வரையான காசினை வங்கியில் வைப்புச் செய்ய எடுத்து சென்றிருந்த போதும் அதற்காக வழியில் காசு தொடர்பான காப்புறுதியொன்றை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வழியில் காசு காப்புறுதி காப்பொன்றை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்வதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| ஓஐஐ அத்தியாயத்தின் 1.2, 1.3, 1.7 மற்றும் 13 ஆம் பிரிவுகள் | உகுவெல கமநல சேவை செயற்குழுவின் 07 அலுவலர்கள் 2022 ஆண்டின் போது பெற்றுக் கொண்ட 37 விடுமுறை நாட்களிற்காக விடுமுறை விண்ணப்பங்களை சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொண்டிருக்காததுடன் இரண்டு அலுவலர்களின் விடுமுறை தொடர்பாக விடுமுறை பதிவேட்டில் எவ்வித குறிப்பும் இடப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு பெண் அபிவிருத்தி அலுவலர் பெற்றுக் கொண்ட 13 கடைமை விடுமுறைகளிற்காக அங்கீகாரம் மற்றும் | தற்போது உரிய விண்ணப்பங்கள் அங்கீகரித்து விடுமுறை பதிவேண்டில் குறித்துள்ளதென. கடமை விடுமுறை தொடர்பாக வெளிச்செல்லும் பதிவேட்டின் குறிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடமை தொடர்பான உறுதிப்படுத்தல் செய்திருக்கவில்லை. | | |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை - 2006 3.4 பந்தி | உகுவெல கமநல சேவை செயற்குழுவினால் சந்தை விலை நிர்ணய முறையை பின்பற்றாது 02 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 358,000 ஆன விவசாய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | வழங்குனர்களை பதிவு செய்து உரிய பெறுகைகள் முறைமையை எதிர்காலத்தில் பின்பற்ற நடவடிக்கை எடுப்பதெனை. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் அறிவுருத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | 11 கமநல சேவை செயற்குழுக்களில் அலுவலர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலை குறிப்பிட விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தயிருக்காதது டன் 09 கமநல சேவை செயற்குழுக்களில் விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்திய போதும் அச்சிட்ட பிரதிகளை பெற்று வரவு, வெளிச் செல்லலை மேற்பார்வை செய்திருக்கவில்லை | இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதெனை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (i) | 1986 ஒக்தோபர் 21 திகதிய இலக்கம் 264 கொண்ட சுற்றறிக்கையின் 01 பந்தி | வாசலகோட்டே மற்றும் ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழுக்கள் மூலம் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 291,420 ஆன அறை வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | வாடகை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதெனை. | சுற்றறிக்கை அறிவுருத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 1988 மே 27 திகதிய இலக்கம் 322 கொண்ட சுற்றிக்கையின் 12 (1) பந்தி | 03 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 01 ஆண்டு முதல் 24 ஆண்டுகள் வரையிலான காலமாக நிலவி வரும் ரூபா | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதெ ன, கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை | சுற்றறிக்கை அறிவுருத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 123,847 ஆன காணி உரித்து பிரவேணி பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுப்பதென மற்றும் பங்கு விளைவு விவசாயிகள் மற்றும் காணி உரிமையாளர்களிற்கு இடையில் பிரச்சினைகளின் மீது நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்புகளின் மீது தேவையான நடவடிக்கை எடுப்பதென. | |
| (iii) | 2018 மே 17 திகதிய இலக்கம் 7/5/2/1-2 (1) கொண்ட கடிதம் | 06 கமநல செயற் குழுக்களில் 32 சந்தர்ப்பங்களில் ரூபா 50,000 எல்லையை விஞ்சியிருந்த கூட்டுத்தொகை ரூபா 8,039,634 ஆன கொடுப்பனவுகளிற்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் துணை கையொப்பமிட்டு இருக்கவில்லை. | சரிசெய்ய நடவடிக்கை எடுத்து அவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுருத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மாதளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்களின் மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 15,293,441 மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த 23 செயற்குழுக்களின் முன்னைய ஆண்டில் ரூபா 10,550,864 மிகையொன்றானது. அதன் பிரகாரம் 15 செயற்குழுக்களிற்குரியதாக நிதி விளைவுகளில் ரூபா 5,891,149 ஆன வளர்ச்சியொன்றும் 08 செயற்குழுக்களிற்குரியதாக நிதி விளைவுகளில் ரூபா 1,148,572 வீழ்ச்சியொன்றும் அவதானிக்கப்பட்டன. இந்த வளர்ச்சிற்கு நிவாரண பசளை கூடிய விலைக்கு விற்பனை சேவைகளை வழங்கும் வருமானமாக இனங்காணுதல், முன்னைய ஆண்டுகளில் செலவுகள் மேற்கொண்டதன் பின்னர் மீள்நிரப்பிய தொகை மற்றும் பங்குவிளைவு பிரவேணி பெறுவனவு வருமானமாக இனங்கண்டிருந்தமை போன்றே குழு பசளை வருமானம், நிலையான வைப்பு வட்டி வருமானம், வீட்டுத்தோட்ட வருமானம், ஏக்கர் வரி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது. நிதி விளைவுகளில் வீழ்ச்சிகளிற்கு கூடுதலான விலை பசளை விற்பனை வருமானம் மற்றும் கலவை வருமானம் குறைந்தமை, தாபன மற்றும் நிர்வாக செலவினம் அதிகரித்தமை மற்றும் ஏக்கர் வரி வருமானம் குறைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 14 கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான காணிகளை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை | கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான காணிகளை | உரிமையை சுவீகரித்துக் கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்வதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 05 கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான நெல் பயிரிட முடியுமான 38 ஏக்கர் 03 ரூட் 68 பர்சஸ் அளவான வயல் காணிகள் தரிசு நிலமாக நிலவியன. | எதிர்காலத்தில் பயிர் செய்கைக்கு தேவையான நடவடிக்கை எடுப்பதுடன் தரிசு வயல்களை விளைவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட அலுவலகத்தினூடாக தற்போது மேற்கொள்வதென. | அனைத்து பயிரிட முடியுமான காணிகளை பயிரிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | விற்பனை செய்து பணம் செலுத்தும் கடன் அடிப்படையின் மீது 05 கமநல சேவை செயற்குழுக்களில் 37 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்களிற்கு விநியோகிக்கப்பட்ட பொருட்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 2,038,036 ஆன கடன் மீதிகளை அறவிட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதுடன் பணம் வழங்குவதனை தாமதமாக்கும் அலுவலர்களின் கம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | 10 குழுக்களின கமநல சேவைக் நிதிக்கூற்றுக்களில் 04 முதல் 17 ஆண்டுகள் வரையிலான காலமாக நிலவி வரும் ரூபா 5,673,259 ஆன பெற வேண்டிய 29 கணக்கு மீதிகள் மற்றும் ரூபா 12,200,120 ஆன 38 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்பதென. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (உ) | ஹுனுகெடஎல செயற்குழுவிற்கு சொந்தமான 06 பிரிவுகளில் 20 ஏக்கர் 04 பர்சஸ அளவு நெற்காணிகள் பயிர்செய்யப்படாது விளைவற்ற நிலையில் நிலவியது. | பயிர்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளாதது தொடர்பாக விசாரணை செய்து காரணம் கோரும் கடிதங்கள் தற்போது அனுப்பப்பட்டு வருவதென. | அனைத்து பயிரிட முடியுமான காணிகளிலும் பயிர்செய்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | ஏக்கர் வரித் தரகு செலுத்தப்பட வேண்டியது குறித்த ஆண்டின் மார்ச் 31 இற்கு முன்னர் அறவிட்ட ஏக்கர் வரித் தொகை அளவின் மீது மாத்திரமான போதும், தம்புள்ளை மற்றும் வாசலகோட்டை கமநல சேவை செயற்குழுவினால் கடந்த ஆண்டில் ரூபா 111,414 ஆன நிலுவையிலிருந்து அறவிட்டதற்காகவும் ரூபா 11,141 | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாட்டை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதுடன் 2023 ஆம் ஆண்டில் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் ஏக்கர் வரி தரகு செலுத்த நடவடிக்கை எடுப்பதென. | குறித்த ஆண்டிற்காக மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறவிட்ட ஏக்கர் வரிக்கு மாத்திரம் தரகு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன ஏக்கர் வரித் தரகு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (எ) | பலாபத்வல கமநல சேவை செயற்குழுவினால் 2021 ஆம் ஆண்டு முதல் விவசாய அமைபபு ஒன்றிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 33,500 ஆன மீதி மற்றும் கடன் அடிப்படையில் வழங்கிய விவசாய உபகரணங்களிற்காக 2015 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 151,619 ஆன மீதியை அறவிட்டிருக்கவில்லை. | பணம் செலுத்துதலை தொடர்ந்தும் புறக்கணித்ததால் மாத்தளை கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதென. | அறவிட வேண்டிய மீதிகளை விரைவில் தீர்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டில் அதிக விலைக்கு பெறப்பட்ட பசளையை குறைந்த விலையில் விற்றதன் மீது பண்டரபொல கமநல சேவை செயற்குழுவிற்கு கமநல அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 318,380 ஆன தொகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகளிற்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரை அறியப்படுத்தியுள்ளதென. | கிடைக்க வேண்டிய மீதியை அறவிட வேண்டும். |
| (ஐ) | தேவஹுவ கமநல சேவை செயற் குழுவினால் 2015/16 பெரும் போகத்திற்காக நிவாரண பசளை விற்பனை மூலம் கமநல அமைச்சிற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,798,020 இனை தீர்த்திருக்கவில்லை. | இந்த தொகையை தீர்ப்பதற்காக மாத்தளை கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதென. | செலுத்த வேண்டிய மீதியை விரைவில் தீர்க்க வேண்டும். |
| (ஒ) | ஏனைய நிறுவனங்களில் இருந்து தேவஹுவ கமநல சேவை செயற் குழுவிற்கு மீள்நிரப்பிக் கொள்ள வேண்டிய ரூபா 892,188 தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்கள அறிவுருத்தலை பெற்று தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | கிடைக்க வேண்டிய மீதியை விரைவில் தீர்க்க வேண்டும். |
| (ஓ) | ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழுவின் முன்னால் விற்பனை உதவி பெண் அலுவலர் ஒருவரின் எழுத்து மூல கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறையான பரீட்சித்தல் அல்லது அங்கீகாரமின்றி ரூபா 128,430 தொகை மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டு இருந்தது. அவரின் கோரிக்கை கடிதம் தவிர செலுத்தியதற்கான காரணத்தை உறுதிப்படுத்தும் எவ்வித ஆவணங்களையும் வவுசருடன் இணைக்கப்பட்டு அல்லது கோவைப்படுத்தப்பட்டு இ ருக்கவில்லை. | கோரிக்கை கடிதத்தின் மீது கொடுப்பனவு செய்ததுடன் வவுச்சர் அங்கீகாரத்திற்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரிற்கு சமர்ப்பித்ததென. | முறையான விசாரணைக்கு பின்னரான அங்கீகாரத்தின் மீது கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | ஹந்துன்கமுவ கமநல சேவை செயற்குழுவின் நிதி நிலைமை கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 171,796 ஆன பணப் பற்றாக்குறையை உறுதிப்படுத்துவதற்காக முறையான விசாரணை ஒன்றை நடாத்தி குறித்த பற்றாக்குறை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இத்தொகையை இதுவரை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தேவையான நடவடிக்கைக்காக பிரதி ஆணையாளரிற்கு அறிக்கை இட்டுள்ளதென. | குறைபாடுகள் தொடர்பாக தேவையான செயற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேவஹுவ கமநல சேவை செயற் குழுவினால் 2020 பெப்ரவரி 06 திகதி விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 24,750 ஆன 03 உளர்த்தும் இயந்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை விற்பனை செய்யப்படவில்லை. | 2022 ஆண்டில் 06 உளர்த்தும் இயந்திரங்களில் 03 இயற்திரங்கள் விற்கப்பட்டதுடன் எஞ்சியுள்ள 03 உளர்த்தும் இயந்திரங்களை இவ்வாண்டில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதென. | விரைவில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாசலக்கோட்டை கமநல சேவை செயற்குழுவின் இரண்டு அலுவலர்களிற்கு விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் வழங்கப்பட்ட 02 புல் வெட்டும் இயந்திரங்கள் கடனை அறவிடும் செயற்திறனின்மை காரணமாக மீள் சுவீகரிக்கப்ட்டிருந்ததுடன் அவ்வாறு மீள் சுவீகரிக்கப்பட்ட இயந்திரங்களை இருப்புப் பதிவேட்டிற்கு உட்படுத்தி இருக்கவில்லை. | நிலவிய கொரோனா தொற்று காரணமாக விற்பனை செய்து பண அடிப்படையில் வழங்கப்பட்ட உபகரணங்களிற்காக பணம் அறவிடப்படாத காரணத்தால் அந்த உபகரணங்களை மீள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்ததுடன் அவை இருப்பு புத்தகங்களில் குறித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்ததென. | இயந்திரங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மைலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 மார்ச் 15 திகதிய 8205 ஆம் இலக்க பட்டியல் மூலம் ஹெட்டிபொல செயற்குழுவின் கோரிக்கையின்றி ரூபா 4,487,532 ஆன 5212 லீற்றர் திரவ பசளை வ/ப லங்கா பசளைகள் கம்பனியினால் செயற்குழுவிற்கு ஒப்படைத்திருந்த போதும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் | வ/ப லங்கா பசளைகள் கம்பனியிலிருந்து கடன் அடிப்படையில் கிடைத்த ரூபா 4,487,532 பெறுமதியான 5212 லீற்றர் திரவ பசளை இறுதி கையிருப்பிற்கு எடுக்கப்பட்டது - இந்த | சம்பந்தப்பட்ட கம்பனியை அறிவுருத்தி பசளை இருப்பை மீள் ஒப்படைக்க அல்லது பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டில் காலாவதியாகியிருந்த அவ் இருப்பு நிதி நிலைமை கூற்றில் இறுதி இருப்பின் கீழ் மற்றும் செலுத்த வேண்டிய மீதியின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | திரவ பசளை இருப்பு வேறொரு நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் போது போக்குவரத்து பிரச்சனை காரணமாக கட்டளை இன்றி எமது நிலையத்திற்கு வழங்கப்பட்டதுடன் எமது நிலையம் இருப்பு புத்தகத்திற்கு இருப்பு உட்படுத்தப்பட்டதென. | |

### 3.4 நிதிய குறைபயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடந்த ஆண்டில் 100 மெற்றிக் தொன் வீதம் சேதன பசளை உற்பத்திக்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 200,000 வீதம் கூட்டுத் தொகை ரூபா 600,000 தொகையை 03 கமநல சேவை செயற்குழுக்களிற்கு வழங்கப்பட்டிருந்த போதும் அவற்றில் ரூபா 255,814 செலவிட்டு 14.78 தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்து 4.08 தொன் விற்பனை செய்யப்பட்டு கருத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் திணைக்களத்தின் சேதனப் பசளை உற்பத்திக்காக வழங்கப்பட்ட ரூபா 200,000 ஆன தொகை சேதனப் பசளை உற்பத்தி செய்து இலாபம் ஈட்டும் நோக்கில் குழுவிற்கு வழங்கப்பட்ட தொகை யல்லாததுடன் எதிர்காலத்தில் கிடைக்கும் அறிவுருத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | வழங்கப்பட்ட முழுத் தொகையையும் பயன்படுத்தி இலக்கு வைக்கப்பட்ட உற்பத்தி அளவை அடைந்து கொள்ள வேண்டும் |

### 3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கலேவெல கமநல சேவை செகயற்குழுவிற்கு மானியமாக கிடைத்திருந்த பெறுமதி இனங்காணப்பட முடியாத அவரை தானியங்களை உடைக்கும் இயந்திரமொன்று மற்றும் நெல் அரைக்கும் இயந்திரம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் விளைவற்று நிலவின. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் 7/5/9/4 (v) மற்றும் 2022.11.28 திகதிய கடிதங்களின் பிரகாரம் பண்ணை விலங்குகள் அபிவிருத்திச் சபைக்கு இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனத்தின் | தொடர்புடைய நிறுவனத்திற்கு வழங்க அல்லது பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் இதுவரை இந்த 02 இயந்திரங்களையும் எடுத்துச் செல்லவில்லையென. | |

**3.6 நிதி முறைகேடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கோங்கஹவெல கமநல சேவை செயற்குழுவின் முன்னால் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர் ஒருவர் செய்த நிதி முறைகேடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் ரூபா 778,310 இணை அறவிட தீர்மானித்து, 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தினுள் ரூபா 345,000 ஆன தொகை அறவிடப்பட்டு எவ்வித காரணத்தையும் குறிப்பிடாது ரூபா 433,310 ஆன தொகையை அறவிடுவது இடைநிறுத்தப்பட்டு இருந்தது | பிரதி அணையாளரின் அறிவுருத்தல் மீது அவரது சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட போதும் 2022 ஆண்டு ஆரம்பத்தில் பிரதான அலுவலகத்தின் மூலம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டதன் மீது அந்த சம்பள அறவீட்டை நிறுத்த பிரதான அலுவலகத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதன் மீது 2022 மார்ச் மாதம் முதல் சம்பளத்திலிருந்து அறவிடுதனை நிறுத்தியதென. | முறைகேட்டிற்கான அனைத்து தொகையையும் அறவிட வேண்டியதுடன் விசாரணை நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்தி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | எல்கடுவ கமநல சேவை செயற்குழுவின் யூரியா பசளை விநியோகத்திற்காக 2022 ஆகஸ்ட் 25 திகதி கிடைத்திருந்த ரூபா 40,800 ஆன வருமானத்தை தினசரி பெறுவனவு பதிவேட்டில் பதிவு செய்யாது முறைகேடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு யூரியா பசளை விற்பனை ரூபா 27,600 மாத்திரம் கணக்கீடு செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டு அப் பெறுமதியை குழு எழுதுனரிடமிருந்து அறவிட வேண்டிய மீதியாக நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது அந்த தொகையின் ஒரு பகுதி செலுத்தி முடிவுறுத்தியுள்ளதுடன் மீதித் தொகையை 2023 ஜூலை 31 திகதியளவில் செலுத்தி முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க இணங்கிக் கொண்டுள்ளதென. | ஒழுக்காற்று நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். |
| (இ) | ஹந்துன்கமுவ கமநல சேவை செயற்குழுவினால் விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் மீளாய்வாண்டில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்து ரூபா 357,750 தொகை தீர்க்கப்பட்டிருந்த போதும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறைகேடுகள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்னாள் குழு எழுதுனராக செயற்பட்ட விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தரினால் அத் தொகையை வருமானத்திற்கு செலவு வைக்காது முறைகேடொன்றை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 216,750 தொகை குழு எழுதுனரின் பெயரில் விற்பனை செய்து பணம் செலுத்தும் கடனாக புத்தகங்களில் போலியாக பதிவு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 15 கமநல சேவை செயற்குழுக்களிற்குரிய 103 பிரிவுகளில் 103 விவசாய மற்றும் ஆரசாய்சி உற்பத்தி உதவியாளர்கள் 02 மாதம் முதல் 08 ஆண்டுகள் வரையான காலமாக வெற்றிடமாக நிலவின. | எதிர்காலத்தில் இந்த அலுவலர்களை ஆட்சேத்தால் இந்த வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கை எடுப்பதென. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல சேவை செயற் குழுக்களில் கமநல வங்கி நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | திணைக்களத்தின் அறிவுருத்தல்களின் பிரகாரம் கணக்க்றிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதென. எதிர்காலத்தில் ˙வேறாக கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 14 கமநல சேவை செயற் குழுக்களினால் ரூபா 1,511,200 செலவில் கொள்வனவு செய்து பயன்படுத்தும் வங்கி மென்பொருளிற்காக ரூபா 479,080 ஆன வருடாந்த சேவைக் கட்டணத்தையும் செலுத்தியிருந்த போதும் அத் தொகுதியை முழுமையாக பயன்படுத்தாமை, அனைத்து தரவுகளையும் உட்படுத்தியிருக்காமை மற்றும் | விரைவில் தரவுகளை உட்படுத்தி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதெனவும் எதிர்காலத்தில் திணைக்களத்தின் மூலம் அறிமுகம் செய்துள்ள மென்பொருளை பயன்படுத்தி கமநல வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி | மென் பொருளை நோக்கத்துடனான செயற்பாடுகளிற்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படு நிலையில் இருக்காத காரணத்தால் செலவிடப்பட்ட தொகை சிக்கனமற்றதாக இருந்தது. | எடுப்பதென. | |
| (இ) | 03 கமநல சேவை செயற் குழுக்களினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நியாய சபைக்கு அனுப்பியிருந்த 126 விவசாயிகளிற்குரிய ரூபா 4,000,191 ஆன கடன் மீதியை அறவிடுவதற்காக நியாய சபை அழைப்பித்தல் விடுத்திருக்கவில்லை. | நியாய சபைக்கு அனுப்பப்பட்ட கடன்தாரர்களிற்காக தற்போது அழைப்பித்தல் கிடைக்கப் பெற்றுவருவதென. | கடனை விரைவில் அறவிட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு 10 கமநல சேவை செயற்குழுக்களின் நிலவிய 336 பெண்கள் கமநல அமைப்புக்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | முதலாம் கட்டத்தில் கிராம மட்டத்தில் கமநல அமைப்புக்களை நிறுவிய போதும் தற்போது வி.ஆ.உ.உ பிரிவினுள் பெண்கள் கமநல அமைப்புக்களை செயற்பாட்டுடன் பேணிச் செல்ல நடவடிககை எடுத்துள்ளதென மற்றும் கமநல அமைப்புகளை மீண்டும் செயற்படுத்திக் கொள்ள தேவையான நிகழ்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | கமநல அமைப்புக்களை செயற்பாட்டுடன் பேணிக் கொள்ள வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு 10 கமநல சேவை செயற்குழுக்களில் 872 விவசாயிகளிடமிருந்து அறிவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 12,771,186 ஆன கடன் 06 மாதங்களிற்கும் 20 ஆண்டுகளிற்கும் இடையிலான அளவு காலம் கடந்துள்ள போதும் அறவிட்டிருக்கவில்லை. | தற்போது அக்கடன்களை அறவிட நியாய சபைக்கு மற்றும் நீதிமன்றத்திற்கும் குறித்த கோவைகள் அனுப்பப்பட்டுள்ளதென. | கடன் மீதிகளை அறவிட நடவபடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு 04 கமநல சேவை செயற்குழுக்களில் நிலவிய 680 சிறுவர் சேமிப்புக் கணக்குகளின் சேமிப்பு மீதிகள் ரூபா 1,000 தொகையை விட குறைவாக காணப்பட்டன. | முன்பள்ளி ஆசிரியர்கள் ஊடாக பெற்றோர்களை தொடர்புபடுத்திக் கொண்டு பெற்றோர்களை அறிவூட்டல் மற்றும் பிரிவுப் பொறுப்பு விவசாய ஆராய்சி உற்பத்தி உதவியாளர்களை தொடர்புபடுத்திக் கொண்டு பல நிகழ்சித் திட்டங்களை செயற்படுத்தி பெற மக சிறுவர் வைப்புக்களை | சேமிப்பை வளர்த்துக் கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேம்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | |
| (எ) | தம்புள்ளை கமநல சேவை செயற்குழுவில் சிந்திப்போம் பெண்கள் கமநல அமைப்பு கட்டாய வைப்புக்களிற்குரியதாக 1025 அங்கத்தவர்களுடன் கூடிய 41 தொழிற்படு கமநல அமைப்புக்கள் காணப்பட்டதுடன் இந்த அமைப்புகளிற்கு அங்கத்தவர் ஒருவரிடமிருந்து மாதாந்தம் ரூபா 150 வீதம் ஓராண்டிற்கு ரூபா 1,845,000 இற்கு அன்மித்த கட்டாய வைப்பை பேணிச் செல்லும் இயலுமை காணப்பட்ட போதும் கடந்த ஆண்டில் ரூபா 276,240 தொகை மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 330,100 தொகையாக கட்டாய வைப்புக்கள் பெறப்பட்டிருந்தன. | விவசாய உள்ளீடுகளின் விலை அதிகரித்தமை, நிலவும் வாழ்கை செலவு அதிகரித்தமை காரணமாக விவசாய கைத்தொழில் கனிஷமான அளவு வீழ்ச்சியடைந்த காரணத்தால் சந்திப்போம் பெண்கள் கமநல அமைப்பு கட்டாய சேமிப்பு இலக்கை அடைந்து கொள்ள இயலாதிருந்தது. எதிர்காலத்தில் சேமிப்பு மேம்பாட்டு இலக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சேமிப்பை அதிகரித்து பெண்கள் விவசாய அமைப்புக்களை வலுப்படுத்த நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | தம்புள்ளை கமநல சேவை செயற்குழுவினால் மக்கள் கம்பனியொன்றிற்கு 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 ஆன கடன் தொகையை வழங்கியிருந்த போதும் எவ்வித தவணையையும் அறவிட்டிருக்காததுடன் கடன் தொகையிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய வட்டியாக ரூபா 1,743,698 தொகை நிலவியது. | 2015 ஆண்டில் நியாய சபைக்கு அனுப்பி உள்ளதுடன் அந்த வழக்கை தற்போது ஐந்து முறைகள் அழைக்கப்பட்டுள்ளதது. விசாரணை மட்டத்தில் நிலவுவதால் தீர்ப்பு வழங்கப்பட்டில்லையென. | வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்தி கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஐ) | தம்புள்ளை கமநல சேவை செயற்குழுவினால் 2021 ஒக்தோபர் 27 ஆம் திகதிய இலக்கம் 16/2021 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 05 ஆம் படிமுறை பிரகாரம் காலம் கடந்த கடன்களிற்குரிய ரூபா 1,082,043 ஆன வட்டியை பதிவழிப்பது தொடர்பாக எழுத்து மூலம் கடன்படுனர்களிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | வட்டி பதிவழிப்பதற்கு உத்தேச கடனாளிகளின் பெயர் பட்டியல் மற்றும் அதன் பின்னர் எஞ்சுகின்ற கடன் மீதி தொடர்பாக தகவல்களும் அக்கடன் தொகை தொடர்ந்தும் செலுத்துவதனை புறக்கணித்தால் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் குறித்த பிரிவுகளில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலகர்கள் ஊடாக கடனாளிகளை அறியபடுத்துவதென. | குறித்த கடனாளிகளிற்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 கொண்ட சுற்றறிக்கையின் 2:5:2 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்காது அலுகொல்ல கமநல சேவை செயற்குழுவில் கமநல வங்கிக் கடன் வழங்கும் போது கடன் கட்டுப்பாட்டு குழு செயலாளரின் பரிந்துரை இல்லாது 15 கடன் விண்ணப்பங்களிற்கு உரியதாக ரூபா 1,270,000 கடன் விநியோகிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக இந்த கடன் விண்ணப்பங்கள் பரீட்ச்சிக்கப்பட போதும் கையொப்பம் இட்டு பரிந்துரை செய்வது விடுபட்டுள்ளது. சரியாக கண்டறிந்து பரிந்துரைக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுருத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | முன்னால் குழு எழுதுனரின் முறைகேடாக ரூபா 11,643 இனை வாசலகோட்டை கமநல சேவை செயற்குழுவின் நிதி நிலைமை கூற்றில் 15 ஆண்டுகளிற்கு அதிக காலமாக குறிப்பிட்டிருந்த போதும் இது தொடர்பாக உரிய நடவடிக்கைக் எடுத்திருக்கவில்லை. | முன்னால் குழு எழுதுனரின் முறைகேடான ரூபா 11,643 தொகைக்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரை அறியப்படுத்தியுள்ளதென. | பெற வேண்டிய மீதியை தீர்திற்கொள்ள மற்றும் முறைகேடு தொடர்பாக உரிய நடவடிக்கையை பின்பற்ற வேண்டும். |